# 11 குணமளிக்கும் அருளடையாளங்கள்

குணமளிக்கும் அருளடையாளங்கள் 2

- ஒப்புரவு
- நோயில் பூசுதல்

ஆன்மீக உடல், உள சுகத்தை இவ்விரு அருளடையாளங்கள் வழியாகப் பெறலாம்.

## ஒப்புரவு அருளடையாளம்



படம் 11.1 - பாவியான பெண் இயேசுவிடம் பாவமன்னிப்புப் பெறல்.

ஒப்புரவின் அருளடையாளம் திருமுழுக்கின் பின் ஒருவர் செய்கின்ற பாவங்களுக்கு மன்னிப்புப்பெற கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்டதாகும். இறை உறவிலிருந்து விலகும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உண்மையான மனமாற்றத்தோடு இந்த அருளடையாளத்தைப் பெற்று மீண்டும் இறைவனோடு உறவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

## ஒப்புரவு அருளடையாளத்தை நிறுவுதல்

உயிர்த்த இயேசு பாஸ்கா ஞாயிறன்று மாலையில் தமது திருத் தூதர்களின் முன் தோன்றி;

> எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படா என்றார்.
>
> (யோவா 20 :22-23)

என திருவிவிலியப் பகுதியில் உள்ள, இவ்வார்த்தைகளைக் கூறி பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தை அவர்களுக்கு வழங்கியதன் வழியாக ஒப்புரவு அருளடையாளத்தை நிறுவினார்.



படம் 11.2 - பாவமன்னிப்பு பெறுகின்ற ஒரு சந்தர்ப்பம்.

## ஒப்புரவு அருளடையாளத்தின் வழியாகக் கிடைக்கும் அருள்

- ★ திருச்சபையோடு (அயலவர்களோடு) ஒப்புரவாகுதல்.
- ★ நித்திய தண்டணையிலிருந்து மீட்பு
- ★ இறைவனுடன் ஒப்புரவு, உள அமைதி
- ★ காலத்துக்குரிய தண்டனையிலிருந்து ஓரளவு விடுதலை
- ★ ஆன்மீக வலிமை

திருமுழுக்குப் பெற்ற ஒருவர் சாவானபாவம் செய்கின்றபோதெல்லாம் மனம் மாறி பாவமன்னிப்புப் பெறவேண்டும். அற்ப பாவங்களைச் செய்த பிறகும் இந்த அருளடையாளத்தைப் பெற்றுக்கொள்வதால் பாவத்திற்கு மன்னிப்பும் பாவத்தை விலக்கி நடக்க வலிமையும் கிடைக்கின்றது. ''பாவ மன்னிப்பு'' எனப்படுவது மீண்டும் மீண்டும் பாவம் செய்வதற்குக் கிடைக்கின்ற ஒரு அனுமதிப் பத்திரம் அல்ல. ஒப்புரவு அருளடையாளத்தின் வழியாக இறைவனோடு உறவை ஏற்படுத்தச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. பாவம் வெறுக்கத்தக்கது என்பதால் அதிலிருந்து விலகிப் போக உறுதி செய்துகொள்ள வேண்டும். இறை அருளில் வாழ்வதற்கு அதனை ஒரு வழியாகக்கொள்ள வேண்டும்.

**ஒப்புரவு அருளடையாளத்தைத் தகுதியான முறையில் பெற்றுக்கொள்ளத் தேவையானவை.**

1. தனது பாவங்களை நினைத்தல்.
2. அவற்றுக்காக மனம் வருந்துதல்.
3. இனிமேல் பாவம் செய்வதில்லை என உறுதி செய்தல்.
4. பாவங்கள் அனைத்தையும் குருவானவரிடம் கூறுதல்.
5. குருவானவர் தரும் அபராதங்களை நிறைவேற்றுதல்

## நோயில் பூசுதல்




படம் 11.3 - பெத்சாயிதா குளத்தருகே குணமளித்தல்

உடல் ரீதியாக நாம் நலிவடையும்போது ஆன்மீக ரீதியான சக்தியைப் பெற்று, ஆன்மீக, உடல் சுகத்தைப் பெற நோயில் பூசுதல் அருளடையாளம் அளிக்கப்படுகிறது.

### நோயில் பூசுதல் அருளடையாளத்தின் வழியாகக் கிடைக்கும் அருள்

- ★ கிறிஸ்துவின் துன்பங்களில் பங்காளியாதல்.
- ★ வேதனையைத் தாங்கிக்கொள்ள வலிமை
- ★ பாவங்களுக்கு மன்னிப்பு
- ★ உடற் சுகம்
- ★ நிலை வாழ்வைப் பெறுவதற்கான ஆயத்தம்.

### நோயில் பூசுதல் அருளடையாளத்தைப் பெறவேண்டிய சந்தர்ப்பங்கள்

- ★ ஒருவர் கடுமையான உடல் நோயில் இருக்கும்போது,
- ★ கடுமையான அறுவை சிகிச்சைக்கு முன்னர்,
- ★ வயோதிபத்தில் உடல் நலிவடைந்து இருக்கையில்,
- ★ மரணத்தருவாயில் இருக்கையில்,
- ★ கடுமையான விபத்தின் பின்னர்.

### நோயில் பூசுதல் பெறுவதற்கான இடத்தினை ஆயத்தம் செய்தல்



படம் 11.4 - நோயில் பூசுதல்

உங்கள் வீட்டில் நோயில் பூசுதல் கொடுக்க இருக்கும் சந்தர்ப்பத்தில் மேற்காணும் விதத்தில் நோயில் பூசுதலுக்கான இடத்தை ஆயத்தம் செய்யுங்கள்.

எமது அயலவரில் ஒருவர் நோயில் இருக்கும் சந்தர்ப்பத்தில் அவர் ஒரு கத்தோலிக்கராய் இருப்பின் பங்குத் தந்தைக்கு அது பற்றி அறிவித்து, இவ்வருளடையாளத்தைப் பெறுவதற்கு தேவையானவற்றைச் செய்தல் வேண்டும். மேலும் அடிக்கடி நற்கருணை பெறுவதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்பாடு செய்தல் வேண்டும். இயலுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒப்புரவு அருளடையாளத்தை பெறச் செய்து அவர்களுக்காகச் செபித்தல் வேண்டும்.

### செயற்பாடு

1. இடைவெளியை நிரப்புக.
   - (i) ''எவருடைய ..................... அவை .....................''
   - (ii) ..................... ஏற்படுத்துவதன் வழியாக வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.
2. நோயில் பூசுதல் பெறக்கூடிய இரண்டு சந்தர்ப்பங்களை எழுதுக.
3. உங்கள் அயலில் வசிக்கும் கத்தோலிக்க நோயாளிக்கான உங்களது கடமைகள் மூன்று எழுதுக.



***வாழ்க்கைக்கு......***

*பாவம் செய்யும் போதெல்லாம்*
*பாவமன்னிப்பைப் பெற்று*
*தவறுகளிலிருந்து விடுபடுவோம்*